ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்ககாலத் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்

**முனைவர் மு. பாண்டி செல்வி**

**உதவிப்பேராசிரியர்**

**ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி. கோயம்புத்தூர்.**

**43**

**ஆய்வுச்சுருக்கம் :**

சங்க இலக்கியங்கள் தமிழிலக்கியத்தின் கருவூலமாக திகழ்கின்றன. மனிதனின் வாழ்வை அகம் புறமாக எடுத்துக்காட்டுகின்றது. மக்களின் வாழ்க்கை நெறியினை அனைத்து இலக்கியங்களும் கூறுவதாயினும் அவை இலக்கியத்திற்கு இலக்கியம் வேறுபடுகின்றது. சங்ககாலத் தமிழர்களின் பண்பாட்டில் விருந்தோம்பல் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. விருந்தினர் நமது உற்றார் உறவினர் மட்டுமல்லாமல் எதிர்பாராமல் திடீரென்று பசியால் வருபவரை விருந்தினர் என்று பண்டைக்காலத்தில் கருத்தில் கொள்ளப்பட்டது.

விருந்தினர்கள் முன்பின் தெரியாதவராக இருப்பினும் அவர்களையும் சிறந்த முறையில் உபசரிக்கும் உயர்ந்த பண்பு தமிழுக்கும் தமிழர்களுக்கும் உண்டு என்று நூல்கள் குறிப்பிடுகின்றன. விருந்தோம்பல் என்பது சங்ககால மக்களின் வாழ்க்கையின் நெறிமுறைகளை ஒன்றாக இணைத்துள்ளது. சங்ககாலத் தமிழர் பண்பாட்டில் இருந்த விருந்தோம்பலை ஆய்வு செய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை :**

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். அவற்றில் முதன்மையானது உணவாகும். காலம் நேரம் பாராமல் எப்பொழுதும் விருந்தினரை உபசரித்தனர். இல்லற வாழ்க்கையின் இன்ப அறமே சிறப்பான முறையில் விருந்தோம்பல் செய்வதுதான். தாமே உண்டு மகிழாமல் தம்மை நாடி வரும் விருந்தினரையும் வரவேற்று உணவளித்து அவர்களின் பசியை போக்கிட வேண்டும். விருந்தோம்பல் செய்வதர்க்கு பொருள் தேவைப்படுகிறது. அதன் பொருட்டு தொழில் செய்ய வேண்டியுள்ளது. வேட்டையாடி உணவு சேகரித்தல், கால்நடைகளை வளர்த்தல், எளிய வேளாண்மை முறை, பண்பட்ட வேளாண்மை முறைகளில் உணவுகளை சேகரித்து விருந்தினருக்கு உணவளித்தனர். இதனையே திருவள்ளுவரும் திருக்குறளில் குறிப்பிடுகின்றார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

- (திருக்குறள் - 81)

இல்லறத்தின் முதல் நோக்கமே விருந்தினருக்கு உதவி செய்திட வேளாண்மை செய்வதுதான் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

மணிமேகலையில் விருந்தோம்பல்:

மணிமேகலையில் உணவின் சிறப்பு கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மண்ணுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்"

**(மணிமேகலை: 25.288- 291)**

விருந்தோம்பலின் சிறப்பு உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத அளவுக்கு வந்தோரை வரவேற்று உபசரித்து அனுப்பி வைக்கின்ற வழக்கம் தமிழர்களுக்கு உரியது.

**திருக்குறளில் விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் என்பது இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய சொற்கள் கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும் என்பதை

"அகம் மலர்ந்து செய்யாள் உறையும் முகமனர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்"

- (திருக்குறள் - 84)

என்ற திருக்குறள் குறிப்பிடுகின்றது. நம் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு உறவினரையும், நண்பர்களையும் இன்முகத்துடன் வரவேற்று அன்புடன் மனதார உபசரிக்கும் பண்பு நம் தமிழர்களுக்கு உரியது. விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள் என்று மு.வரதராசனார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கரிகால் பெருவளத்தான் தான் ஒரு மன்னனாக இருந்தாலும் தன்னை நாடி வந்த இரவலர்களை மதித்துப் போற்றி சிறப்பித்தான் என தெரிய வருகிறது.

மேலும் விருந்தோம்பல் செய்தால்தான் வீடுபேறு அடைய முடியும் என்ற எண்ணமும் மக்களிடத்தில் இருந்து வந்ததாக தெரிகிறது. குறிஞ்சி நிலமான மலையும் மலை சார்ந்த நிலத்தில் வாழும் மக்கள் தங்கள் இல்லம் தேடி வந்தவர்களுக்கு, வரகு, திணை ஆகியவற்றை உணவாக அளித்தனர் என புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

**விருந்தோம்பலின் சிறப்பு:**

**"விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்கே"**

என்று தொல்காப்பியர் விருந்தோம்பலின் சிறப்பினைக் குறிப்பிடுகின்றார்.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் என்னை"

- (சிலம்பு : 16:71-73)

என் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**விருந்தோம்பல் செய்யும் நெறிகள் :**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல செயல் சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்,

அவர் எதிரில் நிற்றல், அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில்வரை பின்தொடர்ந்து செல்லல், அவரிடம் மகிழ்ச்சியாக முகமன் கூறி வழி அனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் முறையாக காசிக்காண்டத்தில் அதிவீரராம பாண்டியர் கூறியுள்ளதை,

"விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என
உரைத்தல், எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்னருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல்
இவ்வொன்வபான  ஒழுக்கமும் வழிபடும் பண்பே "

இவ்வரிகளில் மூலம் அறிய முடிகிறது.

"ஒப்புடன் முகம் மலர்ந்தே
உபசரித்து உண்மை பேசி..."

எனும் விவேகசிந்தாமணி பாடல் வரிகளும் விருந்தோம்பல் செய்யும் முறைகளை கூறுகிறது.

**தொல்காப்பியத்தில் விருந்தோம்பல்**

தலைவன், தலைவி ஆகிய இருவருக்குள் நடக்கும் ஊடலை சரி செய்பவர்களாக விருந்தினரையும் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.

“தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர்
விருந்தினர் கூத்தர் விறலியர் அறிவர்
கண்டோர் யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப”

- (தொல்காப்பியம் 191)

தலைவன் வினை மீண்டு வந்தால் விருந்து கொடுக்கின்ற மரபு இருந்ததை தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது.

“அருந்தொழில் முடித்த செம்மல்
காலை விருந்தோடு நல்லவை வேண்டும்”

- (தொல்காப்பியம் – 183)

புறநானுறு பகிரும் விருந்தோம்பல் :

விருந்தோம்பலை கடமையாகக் கொண்டவர்கள் பிறரிடம் கடன் வாங்கி கூட தன் கடமையைச் செய்தனர். வறுமையுற்ற நிலையிலும் தன் கடமையென விருந்தோம்பல் செய்ததை,

" நெருனை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் புழவால் வைத்தனன்

இன்று இக் கருங்கோட்டுச் சீரியாழ் பனையம்
இது கொண்டு ஈவதிலாளன் "

-(புற - சீறியாழ் பணையம்-316)

இப்பாடலின் மூலம் அறியலாம். முதல் நாள் விருந்து பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளைப் பணையம் வைத்தான் தலைவன். இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை

" உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும். இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே "

- (புறநானூறு -1)

என்று கடலுள் மாய்ந்த இளம்பெறுவழுதி குறிப்பிட்டுள்ளார். வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர். தலைவி ஒருத்தி தன் இல்லத்தில் இருந்த வரகையும், திணையையும் இரவலர்க்கு கொடுத்தாள். தன்னிடம் பொருள் இல்லா நிலையில் அருகில் உள்ளவர்களிடம் வாங்கி கொடுத்தாள். இந்நிலையில் விருந்தினர் வந்தனர் அப்போது விருந்து படைக்க விதைப்பதற்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குற்றி விருந்து செய்ததை,

" வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக் கொளத் தீர்ந்தெனக்
குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்
குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து "

(புற- தங்கினிர் சென்மோ புலவீர்-333)

இவ்வரிகளின் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்ண வேண்டும்"

என்கிறார் ஔவையார்

இக்கட்டுரையானது நமது சங்க இலக்கியங்கள் விருந்தோம்பலின் சிறப்பை தெளிவாக எடுத்துரைக்கின்றது. விருந்தினரை உபசரிக்கும் போது நம்முடைய நட்பானது மேலும் வளர்ந்து சுற்றம் பெருகும் என்பதை உறுதி செய்ய முடிகின்றது. உலகிலுள்ள எந்த நாடுகளிலும் தமிழர் போன்று விருந்தோம்பலை நம்மால் காணமுடியாது. இது தமிழர்களுக்கான தனிச் சிறப்பாகும்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

(திருக்குறள் -80 )

அதாவது நம் முன்னோர்கள், வந்த விருந்தினர்களை அன்புடன் கவனித்து அனுப்புவதோடு, வரவிருக்கும் விருந்தினர்களுக்காக வாயிலில் காத்துக் கொண்டும் இருந்தவர்கள். இத்தகைய பெருமிதம் உடைய இனத்தில் பிறந்த நாம் பெருமைக்குரியவர்கள் எம் கலாச்சாரம், எம் பண்பாடு, எம் பழக்கவழக்கங்கள் என்பதை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் கலாச்சாரத்தை மேம்படுத்தி அதன்படி நடக்கவும் முற்படுவோமாக.

**துணைநூல் பட்டியல் :**

1.ஜெ.ஸ்ரீ சந்திரன், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தொகுதி -1,2,3
தமிழ் நிலையம் சென்னை 2007.

2.சீவகசிந்தாமணி, இரண்டாம் தொகுதி வர்த்தமானன் வெளியீடு சென்னை 2016.

3.கு.வை.பாலசுப்பிரமணியன்(உரை.ஆ) புறநானூறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை 2004.

4.செவ்விலக்கிய கருவூலம் -7 ஐங்குறுநூறு ஔவை துரைசாமி பிள்ளை கோ இளவழகன் தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் தி.நகர் சென்னை 600 017.2008

5.செவ்விலக்கிய கருவூலம் 13 (புறநானூறு) ஔவை சு.துரைசாமிப்பிள்ளை கோ. இளவழகன் சென்னை 600 107, 2008.

6. திருக்குறள் தெளிவுரை-மு. வரதராசன், பாரி நிலையம் சென்னை, 2014.